1979 மார்ச் 22]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, பாதாள சாக்கடை திட்டம் முக்கியத்துவம் கருதி ஏதாவது ஒரு நகராட்சி அந்தத் திட்டத்தை செயல் படுத்த வேண்டும் என்று கேட்டு அதற்குத் தேவைப்பட்ட நிதி அளிக்க முன் வந்தால் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அந்தத் திட்டத்தைச் செயல் படுத்தும்.

திருநெல்வேலியில் பேருந்துகளில் இடங்கள் பதிவு

வினா எண். 509—திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி வழியாக தற்போது செல்லும் பல்லவன் போக்குவரத்து நீண்ட தூர ஊர்திகளில் திருநெல்வேலியிலிருந்து முன் பதிவுக்காக (Reservation) எத்தனை இடங்கள் ஒதுக்கப் பட்டுள்ளன ?

(ஆ) அவற்றை மேலும் உயர்த்த அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஐந்து இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

(ஆ) இவற்றை மேலும் உயர்த்த தற்சமயம் செயற் குறிப்பு ஏதும் இல்லை.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவர் அவர்களே, திருநெல்வேலிக்கு ஒதுக்கி இருக்கும் சீட் 5 என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பல்வேறு இடங்களில் இருந்து வருகிறவர்கள் திருநெல்வேலிக்கு வந்து பிற இடங்களுக்குச் செல்ல வேண்டியிருப்பதால், அந்த 5 இடங்களை அதிகப்படுத்த அரசாங்கம் ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, மேலும் பேருந்துகளில் சீட்டுகள் அதிகப்படுத்துவதற்கு பதிலாக, புதிதாக பேருந்துகள் விடலாமா என்று யோசித்து, 20–11–78 முதல் இரண்டு பேருந்துகள் விடப்படுகின்றன. மேலும் பேருந்துகள் விட வேண்டிய அவசியம் இருக்கிறது என்று தெரிந்தால், அதிகமான பேருந்துகளை அரசு விடுவதற்கு ஏற்பாடுகளைச் செய்யும்.